10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 238 புதன்கிழமை ஜனவரி 17 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## தற்கொலையாளிக்கு உதவி பெண்ணுக்குச் சிறை

கொழும்பு,ஜன.17

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் தற்கொலைத்தாரி ஒருவருக்கு உதவிய பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

06▶

## கிளிநொச்சியில் 'மஞ்சுவிரட்டு'



கிளிநொச்சி,ஜன.17

தமிழகத்தின் ஜல்லிக்கட்டு போன்ற பாரம் பாரிய விளையாட்டான 'மஞ்சு விரட்டு' பல வருடங்களுக்குப் பின்னர் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

06▶

## கிட்டுவுக்கு நினைவேந்தல்



முல்லைத்தீவு, ஜன. 17

வங்கக்கடலில் வீரகாவியமான விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

06▶

### "இடைக்கால அறிக்கையில் ஏதுமில்லை"

# தீர்வைத் திணித்தால் நாங்கள் எதிர்ப்போம்

### வடக்கு முதலமைச்சர் முழக்கம்



யாழ்ப்பாணம், ஜன.17

"தமிழ் மக்கள் ஏற்காத அல்லது விரும்பாத தீர்வினைத் திணிக்க முற்பட்டால் அதனை நாங்க எதிர்ப்போம். எமக்கு என்ன தேவையோ அதனைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, அரசு தருவதை மட்டுமே வாங்குவது பொருத்தமாகாது" என்று முழங்கினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையின் கருத்தமர்வு, பேரவையின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

06▶

## பன்னங்கண்டிப் பாலத்தில் இளைஞரின் சடலம் மீட்பு



கிளிநொச்சி, ஜன. 17

கிளிநொச்சி வட்டக்கச்சி பன்னங்கண்டிப் பாலத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தில் இனந்தெரியாத நபரின் சடலம் மிதப்பதை அவதானித்த பொதுமக்கள் பொலிசாருக்கு வழங்கிய தகவலையடுத்து இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

பின்னர் குறித்த சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு

06▶

## புதிய கூட்டணி உருவாகுமென்று கூட்டமைப்பு நடுங்கியது

### போட்டுடைத்தார் வரதராஜப்பெருமாள்



யாழ்ப்பாணம், ஜன.17

தமக்குச்சவால்விடுக்கும்வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈபிஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஒரு கூட்டணியாக இணைந்தால், மக்களிடம் எழுச்சி பெற்றுவிடுவார்கள் எனக் கூட்டமைப்பினர் நடுங்கிப் போயிருந்தனர். அதனாலேயே தங்கள் அணியில் என்னையும் இணைக்க வலிய வந்து பேச்சு நடத்தினர்"

06▶




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

www.relianceinternationalms.com



அவுஸ்திரேலியாவில் குடியுரிமை விசா, மாணவர் விசா மற்றும் வியாபார விசா என்பவற்றைப் பெற்றுக்கொள்ள

RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES

Australian Office :
Address: No: 9, Quarters Blvd,
Cranbourne West , VIC 3977
Tel : 61459450000

Sri Lanka office :
Contact Swarna
33/1 Kirillapone Avenue
Colombo 5, Sri Lanka.
Mobile : 0773112240 , 5637668

Consultation by appointment only,
Tel: 0459450000
Email: relianceinternationalms@gmail.com
rimigrationservices@bigpond.com
Web: www.relianceinternationalms.com



Member of Migration Institute of Australia

Contact us for consultation with
Thilinika Wijesinghe
Registered Migration Agent
(MARN: 1463863 MIA: 8531)


# தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு




யாழ்ப்பாணம், ஜன.17

வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.(அ)

# மகிந்தவின் கட்சிக்கு முல்லையில் அலுவலகங்கள்



முல்லைத்தீவு, ஜன,17

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகிந்தவுக்கு ஆதரவான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகங்கள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

முள்ளியவளை, கிச்சிராபுரம், சிலாவத்தை, செம்மலை, வெலிஓயா போன்ற பகுதிகளிலேயே குறித்த கட்சியின் 7 அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் மாவட்ட இணைப்பாளர் துசார தெரிவித்துள்ளார்.

முள்ளிவளை கிச்சிராபுரத்தில் நேற்று மதியம் நடைபெற்ற கட்சி அலுவலகத் திறப்பு நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வடமாகாண இணைப்பாளரும் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சருமான எஸ்.எம்.றஞ்சித் அலுவலகத்தினை திறந்து வைத்து கருத்துரை நிகழ்த்தினார்.

இதன்போது முன்னாள் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் உள்ளிட்ட வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (அ)



# இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பானம், ஜன.17

யாழ்ப்பாணம்- நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 16 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை குறித்த மீனவர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவர்களது 4 றோலர் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (அ)

# கர்ப்பத்தடை மாத்திரை பாடசாலை வளாகத்தில்

அனுராதபுரம், ஜன.17

அனுராதபுரம் நகருக்கு அண்மையிலுள்ள கலவன் பாடசாலை ஒன்றின் வளாகத்திலிருந்து கர்ப்பமடைவதைத் தடுக்கும் மருந்து வகையொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் நேற்றுப் பெற்றோர் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். இதன்போதே இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்து பயன்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், இதே போல் 40 வில்லைகள் அடங்கிய 20 மருந்து உறைகள் கைப்பற்றப்பட்டதாகவும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர். (அ)

# தமிழ் மக்களை அரசிடம் விற்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

மைத்திரி - ரணில் கூட்டு அரசினால் முன்னெடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு துரோகமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாடாளுமன்றத்தில் கை தூக்குகின்றவர்களாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு காவடி எடுப்பவர்களாகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

யாழிலுள்ள ஜே.வி.பி அலுவலகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியியலாளர் சந்திப்பிலேயே அக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் ரத்நாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதற்தடவையாக வடக்கில் நாம் போட்டியிடுகின்றோம். அது ஏனெனில் வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசுகின்ற தரப்பினர்கள் இங்கில்லை.

இங்குள்ள அரசியல்வாதிகள் தமது தேவைகள் பற்றியே நாடாமன்றத்தில் பேசுகின்றனர். இதனாலேயே வடக்கு மக்களின் குரலாக ஒலிப்பதற்கு நாம் முன்வந்திருக்கின்றோம்.



இங்குள்ள மக்கள் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை எடுத்துக் கொண்டால் அவர்கள் மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதில்லை. அதே போன்று மாகாண சபையை எடுத்தக் கொண்டால் அவர்கள் மக்கள் நலன்சார் திட்டங்களை முன்னெடுப்பதில்லை. இவ்வாறு அனைவரும் மக்கள் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்காதவர்களாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையிலும் கூட கூட்டமைப்பினர் எம்மைப் பார்த்து சிங்களக் கட்சி என்றும் எமக்கு வாக்களிக்க வேண்டாமென்றும் தமிழ் மக்களிடம் கூறுகின்றனர். அவ்வாறு கூறுகின்ற கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்குத் துரோகமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாடாளுமன்றத்தில் கை தூக்குகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு காவடி எடுக்கின்றனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியிடம் தமிழ் மக்களை விற்கின்ற கூட்டமைப்பினர் தான் எம்மைப் பார்த்து சிங்களக் கட்சி என்று கூச்சலிடுகின்றனர்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# மகிந்தவைப் பாதுகாக்கவே மொட்டுக்கு வாக்கு கேட்கிறார்கள்

வவுனியா, ஜன.17

"ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் மட்டுமே இந்த நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். மொட்டில் மகிந்த ராஜபக்சவை பாதுகாக்க வாக்கு கேட்கிறார்கள். வெற்றிலை, கை என்பவற்றில் தமது கட்சியை பலப்படுத்த வாக்குக் கேட்கிறார்கள். ஆனால் நாங்கள் உங்களைப் பாதுகாக்க, இந்த நாட்டைப் பாதுகாக்கவே வாக்குக் கேட்கின்றோம் "என நீர்ப்பாசன அமைச்சர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

வவுனியா நகரசபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தாண்டிக்குளத்தில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

"வவுனியா மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம். இந்த மக்கீள் முன்னர் உயிராபத்துக்களை எதிர் கொண்டிருந்தார்கள். கப்பம் செலுத்தியிருந்தார்கள். போரால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். யுத்தம் முடிந்த பின்பும் இன்னும் முழுமையாக அபிவிருத்தி ஏற்படவில்லை. வீட்டுத் திட்டம், வீதி, நீர்பாசனம், குளக்கட்டுமானம் என பல திட்டங்களை இன்னும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவற்றில் வளர்ச்சி ஏற்பட்டால் மட்டுமே இந்த மக்கள் அபிவிருத்தி அடைய முடியும். வவுனியாவும் இலங்கையின் ஒரு பகுதியே. ஏனைய பகுதிகளைப் போன்று நாம் இங்கும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்று 70 வருடம் ஆகிறது. ஆனால் ஜனாதிபதி, பிரதமர் எனப் பலர் வந்தனர். அவர்கள் இந்த நாட்டின் தாய்மார், பிள்ளைகள் பற்றி அவர்கள் கவனம் செலுத்தவில்லை. அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என எங்கள் அரசாங்கம் தான் கவனம் செலுத்துகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரிந்து இருக்கிறது. சுதந்திரக் கட்சி இரண்டு மூன்றாகப் பிரிந்து இருக்கிறது. எங்களது அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சிக்காரர்களும் அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஆனால் நர்ட்டின் அபிவிருத்திக்கான வேலைகளைச் செய்வது ஐக்கிய தேசியக் கட்சியே" என்று அவர் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் இந்து சமய மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(அ)

எதிரொலி Ethiroli
புதன். 17 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## துகிலுரியப்பட்ட இடைக்கால அறிக்கை

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பான மாயையைக் களையும் கருத்தரங்கொன்று வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்து முடிந்திருக்கிறது. ஆனால், பல தடைகள், இடையூறுகள், போட்டுக் கொடுப்புகள், பெட்டிசன்கள் என்பவற்றையெல்லாம் தாண்டியே அந்த நிகழ்வு நடக்கவேண்டிய சூழல். இந்தக் கருத்தரங்கு நடந்தால் அது சில தரப்புகளின் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் எனப் புகார் கொடுக்கப்பட்டதால் தேர்தல் ஆணையகம், இந்த நிகழ்வை நடத்த தடுத்தது. ஆயினும் அந்த நிகழ்வு எந்தவொரு அரசியல் கட்சி சார்ந்த நிகழ்வல்ல எனவும், மக்களுக்கு இடைக்கால அறிக்கை பற்றி தெளிவூட்டும் நிகழ்வு மட்டுமே என பல ஆதாரங்களைக் கொடுத்த பின்னே கருத்தாடலை நடத்த தேர்தல் ஆணையகம் இணக்கம் தெரிவித்தது.

ஒரு கட்சிக்கும் சார்பில்லாமல், இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களுக்கு உள்ள சாதக, பாதக அம்சங்களை குறித்த துறைசார் வல்லுநர்கள் பிரித்து மேய இருப்பது யாரோ சிலருக்குப் பிடிக்கவில்லை. அப்படி இடைக்கால அறிக்கை பகிரங்க வெளியில் ஆதாரங்களோடு துகிலுரியப்பட்டால், தங்கள் திரைகள் திறந்து மக்கள் முன்னிலையில் அம்மணமாக்கப்பட்டுவிடுவோம் என அவர்கள் பயந்துவிட்டார்கள். அதனாலேயே எப்பாடுபட்டாலும் அதனைத் தடுத்து நிறுத்த அவர்கள் தங்களுக்குத் தெரிந்த அத்தனை சூழ்ச்சிகளையும் பிரயோகித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் அத்தனை அஸ்திரங்களும் பயனற்றுப் போய், குறித்த தடைகள் எல்லாமே அந்தக் கருத்தாடலுக்கான இலவச விளம்பரமாக மாறி அரங்கு நிறைந்த பார்வையாளர்களை அழைத்து வந்திருக்கிறது.

எப்படியாவது இடைக்கால அறிக்கையை நிறைவேற்றிவிட வேண்டுமென்று துடிக்கின்ற சில தமிழ் அரசியல் தரப்புகளில் இந்தக் கருத்தாடலுக்கு ஆப்பைச் சொருகியிருக்கும் என்பது பலருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

அவர்கள்தான் இடைக்கால அறிக்கை தமிழ் மக்களுக்கு வாராது வந்த வரப்பிரசாதம் என மேடைக்கு மேடை முழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சமஷ்டியை விடவும் அதிகமான அதிகார எல்லைகளை இந்த இடைக்கால வரைபு கொண்டிருக்கிறது எனவும், மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற முடியாத சாதகத்தையும் இந்த புதிய அரசியலமைப்பு உள்ளடக்கியிருக்கிறது எனவும், அவர்கள்தான் கூறிவருகிறார்கள்.

ஆனால், அந்தக் கூற்றுக்கு மாறாக இடைக்கால வரைபு கொண்டிருக்கக்கூடிய தமிழர்களுக்கு எதிரான பாதகங்களையும், பெரும்பான்மை இனத்துக்கு சார்பான அம்சங்களையும், எப்படி அது இன்னும் இறுக்கமான ஒற்றையாட்சித் தன்மையின் பரிமாணங்களைத் தந்திரமான சொற்களூடாக பிரயோகிக்கப்போகிறது என்பதையும் பொது வெளியில் வெளிச்சம் போட்டுக் காட்டுவதென்பது இடைக்கால அறிக்கையின் அபிமானிகளுக்கு கசப்பாகத்தான் இருக்கும்.

ஆனாலும் அந்தக் கசப்பை அவர்கள் ஒரு பொது நிகழ்வின் மீது காட்டியிருப்பதுதான் தவறானது. தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று இடைக்கால அறிக்கையை நியாயப்படுத்தாமல் அதிலுள்ள உண்மைத் தன்மையை அவர்களும் வெளிப்படுத்த வர வேண்டும்.

மாறாக, அந்த அரசியலமைப்பு தமிழர்களுக்கு சாதகமான அம்சங்களைத்தான் கொண்டிருக்குமானால் அது பற்றி பகிரங்க விவாதத்துக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதைவிடுத்து சிறு பிள்ளைத்தனமாக சீப்பை ஒளித்துவைத்தால் திருமணம் நின்றுவிடும் என்ற பாணியில் கருத்தாடலைத் தடை செய்ய முனைவது கண்டிக்கத்தக்கது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# மின் துண்டிப்பைக் குறைக்க புதிய சுத்திகரிப்பு இயந்திரம்

யாழ்ப்பாணம்,ஜன.17

உயர் அழுத்த மின் கம்பிகளின் இணைப்புகளைச் சுத்திகரிக்கும் நவீன பொறிமுறைத் தொகுதி இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணம் பொறியியல் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக யாழ். மாவட்டத்துக்கான மின் விநியோகத்தை துண்டிக்காமலேயே மின் கம்பங்களின் மாபிள்களைச் சுத்திகரிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லக்ஸபான தேசிய மின்னிணைப்பிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு வரும் உயர் அழுத்தம் கொண்ட மின் மார்க்க கம்பிகளின் இணைப்புகளுக்கு இடையே தூசிகள் படியும். அவற்றால் மின் விநியோகம் தடைப்படும் அல்லது மின் அழுத்தம் குறைவடையும். அதனால் மின் கம்பங்களின் மாபிள்கள் சுழற்சி முறையில் சுத்திகரிக்கப்படுவதுண்டு.

இவ்வாறு சுத்திகரிகப்படும் போது மின் விநியோகம் இடைநிறுத்தப்படும். இந்த நடைமுறையே இதுவரை பின்பற்றப்பட்டது. தற்போது இலங்கை மின்சார சபையால் யாழ்ப்பாணம் மின் பொறியியல் பிரிவுக்கு புதிய சுத்திகரிப்புப் பொறிமுறை இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பொறிமுறை ஊடாக மின் விநியோகத்தை இடைநிறுத்தாமலேயே மின்கம்ப மாபிள்களை சுத்திகரிக்க முடியும். இந்தப் பொறிமுறை ஊடான சுத்திகரிப்புப் பணிகள் யாழ். மாவட்டத்தில் நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டன. (அ)

## கூட்டமைப்பு வேட்பாளரால் குஞ்சுக்குளத்தில் குழப்பம்

முல்லைத்தீவு, ஜன.17

முல்லைத்தீவு முள்ளியவளை குஞ்சுக்குளம் பகுதியில் மக்களின் காணிகளுக்கு நடுவே கழிவு வாய்க்கால் அமைக்க முயன்றமையால் காணி உரிமையாளர்களுக்கும் வாய்க்கால் வெட்டும் பணியில் ஈடுபட்டவர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அங்கு வாய்க்கால் அமைப்பதற்காக வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவர் மக்களின் காணி வேலிகளை 'பெக்கோ' இயந்திரம் மூலம் பிடுங்கி எறிந்து காணிகளுக்கூடாக வாய்க்கால் அமைக்க முயன்றமையாலே இந்தக் குழப்பம் ஏற்பட்டதாகவும், மக்களின் எதிர்ப்பை அடுத்து கழிவுவாய்க்கால் அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



## ரணிலுக்கு ஆப்பு 'ரெடி!"

கொழும்பு,ஜன.17

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாராகி விட்டதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து விவாதம் நடைபெறவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை கூட்டு எதிர்க்கட்சியின் கட்சித்தலைவர்களுக்கு இடையிலான கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வீட்டில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதன்போதே நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.(அ)

# ரயில் மோதி பசுக்கள் பலி

யாழ்ப்பாணம்,ஜன.17

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக தண்டவாளத்தில் மேய்ந்து கொண்டிருந்த இரண்டு பசு மாடுகள் ரயில் மோதி உயிரிழந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட ரயில் மாடுகளை மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

ரயில் மோதிய வேகத்தில், மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் இரண்டும் வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக தூக்கி வீசப்பட்டன. கல்லூரி முடிவடைந்து வீடு செல்வதற்காக காத்திருந்த மாணவியை அந்தப் பசு மோதியதில் மாணவி ஒருவர் காயமடைந்தார்.



காயமடைந்த மாணவி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

# மகிந்தவின் தோல்விக்கு தமிழர்கள் காரணமல்ல

கொழும்பு,ஜன.17

"மகிந்த ராஜபக்சவைத் தோற்கடித்தவர்கள் தமிழ்-முஸ்லிம் மக்கள் அல்லர். மாறாக மகிந்தவின் சகோதரர்களும், அவர்கள் சுதந்திரக் கட்சியின் பழைய உறுப்பினர்களுக்குச் செய்த அநியாயங்களுமே மகிந்தவைத் தோற்க வைத்தன"

-இவ்வாறு ராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார். தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும் மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாகவும் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

" பிணை முறி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவில் நானும் இருந்தேன். பிணை முறி மோசடியுடன் தொடர்புபட்ட அமைச்சர்களையும் பதவி நீக்கும் வேலையை ரணில் செய்வார் என்று நம்புகிறோம்.எவ்வாறு ரவி நீக்கப்பட்டாரோ அவ்வாறே இவர்கள் விடயத்திலும் அவர் நடவடிக்கை எடுப்பார் என்று நான் நம்புகிறேன்.

அடுத்ததாக அவர்கள் தொலைபேசியில் பேசிய விடயம் என்னவென்பதை கண்டறிந்த பின்பே அவர்கள் குற்றவாளிகளா அல்லது நிரபராதிகளா என்ற முடிவுக்கு வரமுடியும்.

தொலைபேசியில் பேசிய ஒரே காரணத்துக்காக அவர்களை எடுத்த எடுப்பில் குற்றவாளிகள் என்று சொல்ல முடியாது.முதலில் அவர்கள் அனைவரும் விசாரிக்கப்பட வேண்டும். மகிந்த ராஜபக்சவைத் தோற்கடித்தவர்கள் தமிழ்-முஸ்லிம் மக்கள் அல்லர். மஹிந்தவின் சகோதரர்கள் சுதந்திரக் கட்சியின் பழைய உறுப்பினர்களுக்குச் செய்த அநியாயங்கள் காரணமாக சுதந்திர கட்சியின் வாக்காளர்களுள் 15 வீதமானவர்கள் மைத்திரிக்கு ஆதரவாக வாக்களித்ததரலேயே மகிந்த தோல்வியடைந்தார்.


சுதந்திரக் கட்சியின் கோட்டையாக இருந்த கம்பஹா கூட மஹிந்தவுக்கு எதிராகவே வாக்களித்தது.எனவே மகிந்தவின் தோல்விக்கு தமிழ்-முஸ்லிம் மக்கள்மீது பழியைப் போடுவது சரி இல்லை. ஆட்சி மாற்றத்தின் பின் நாம் இப்போது முக்கியமான ஒரு கட்டத்தில் வந்து நிற்கின்றோம். அது தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல். எமது மூன்று வருட ஆட்சி எந்தளவு மக்களைத் திருப்திப்படுத்தியுள்ளது என்பது இந்தத் தேர்தலின் முடிவில் தெரிய வரும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## இன்று நாளும் கோளும்

17.01.2018 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 03 ஆம் நாள்
உத்திராடம் பி.ப. 11.01 மணி வரை
கரணம் 06.00-07.30 குளிகை பி.ப. 10.30-12.00
இராகுகாலம் 12.00 - 01.30
சுபநேரம் மு.ப. 10.30 - 11.30 எமகண்டம் மு.ப. 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கவலை | ஆர்வம் | அசதி | ஆதரவு | முயற்சி | மறதி | துயரம் | இன்பம் | தொல்லை | பயம் | சோர்வு | உயர்வு |

எதிரொலி
Ethiroli
புதன் 17 ஜனவரி 2018



# தமிழீழத்தைக் கொடுக்கவே இந்தக் குட்டித் தேர்தல்

## விமல் வீரவன்ச 'எதிரொலி'க்கு விசேட நேர்காணல்

*கேள்வி: ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று வருடங்கள் நிறைந்துவிட்டன. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?*

பதில்: இருக்கின்ற ஆட்சியைக் கவிழ்த்து இன்னோர் ஆட்சியைக் கொண்டுவருவதாக இருந்தால், வருகின்ற ஆட்சி இருக்கின்ற ஆட்சியைவிட சிறந்ததாக இருக்க வேண்டும். ஆனால், இருந்த ஆட்சியை மாற்றியதற்கான நோக்கம் சிறந்த ஆட்சியைக் கொண்டு வருவதற்காக அல்ல.

மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் தேவையாக இருந்தது மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதுதான். அதற்கு மாற்றீடாக வருகின்ற ஆட்சி சிறந்த ஆட்சியாக இருக்க வேண்டும் என்ற தேவை இந்த நாடுகளுக்கு இல்லை. தங்களின் தேவையை நிறைவேற்றக்கூடிய–தங்களுக்கு அடிபணிகின்ற ஆட்சியாக இருந்தால் சரி. அதுதான் இப்போது நடக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிக்கு வாக்களித்தவர்கள் இப்போது தலையில் கைவைக்கின்றனர்.

*கே: மகிந்தவின் ஆட்சியில் மக்களுக்குப் பிரச்சினைகள் இருந்தன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?*

ப: அந்த ஆட்சி 100 வீதம் பூரணமானதல்ல என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல குற்றச்சாட்டுக்களில் இருந்து விலக முடியாது. ஆனால், அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான நபர்கள் அனைவரும் இப்போது மைத்திரியுடன் இணைந்திருக்கின்றனர். இந்த மூன்று வருடங்களுக்குள் அவை தொடர்பில் தேடிப் பார்த்து நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்யாது காலத்தைக் கடத்திவிட்டு இப்போது தேடுவதில் அர்த்தமற்றது.

மகிந்த ராஜபக்ச இரண்டரை வருடங்களில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். அவ்வளவு பெரிய யுத்தத்தையே இரண்டரை வருடங்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்றால் கடந்த அரசின் திருடர்கள் இருந்திருந்தால் அவர்களை மூன்று வருடங்களுக்குப் பிடித்து தண்டனை வழங்குவது கஷ்டமான விடயமா? நிதி மோசடி பற்றிப் பேசியவர்கள் ஆட்சிக்கு வந்து 20 நாட்களில் மத்திய வங்கியைக் கொள்ளையடித்துவிட்டனர்.

*கே: பழைய தவறுகளில் இருந்து பாடம் கற்றுள்ளீர்களா?பழைய தவறுகள் மீண்டும் இடம்பெறா என்று மக்களுக்கு உறுதியளிக்க முடியுமா?*

ப: நாம் தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக மாறியதும் தோல்விக்கான காரணத்தைத் தேடும் பணிக்கு நாம் முன்னுரிமை கொடுத்தோம். கண்டறியப்பட்ட தவறுகள் இனி உள்ளடக்கப்படாத ஆட்சியை உருவாக்குவது எமது தேவையாகும். இந்தத் தேவையை அடிப்படையாகக் கொண்டுதான் நாம் எதிர்க்கட்சியின் பொறுப்புக்களை நிறைவேற்றி வருகிறோம். இல்லாவிட்டால் நாம் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றிருப்போம். இந்த ஆட்சியுடன் ஒப்பிடுகையில் எமது ஆட்சி எவ்வளவோ நல்லம். இருந்தாலும் 'அந்த ஆட்சியில் இருந்த தவறுகளை நீக்கிவிட்டு மிகவும் நல்லதோர் ஆட்சியை அமைப்பதுதான் எமது நோக்கம்.

*கே : தேர்தல் அறிவிக்கப்பட்டதும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி விழத்தொடங்கிவிட்டதே. அதில் இருந்து பலர் மைத்திரி பக்கம் சென்றுவிட்டனரே ?*

ப: பொதுவாக ஆட்சி அதிகாரங்களைக் கொண்டிருக்கும் தரப்பு எதிர்க்கட்சியில் இருக்கும் சுயநலவாதிகளை வளைத்துப்போடுவது சாதாரண விடயம். இவ்வாறான நிகழ்வு நடந்தது என்பதற்காக எமது சக்தி வீழ்ச்சியடைகின்றது என்று அர்த்தமில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தவின் படத்தைப் பாவித்து வெற்றிபெற்றவர்கள்கூட தேர்தல் முடிந்ததும் மைத்திரி தரப்புக்குச் சென்றனர். அப்படிப் போனதால் நாம் பலவீனமடையவில்லை. அதன் பிறகுதானே நாம் பலமான பேரணியையும் மே தினக் கூட்டத்தையும் நடத்தினோம். தேர்தல் முடிந்து 43 பேர் மைத்திரியின் பக்கம் போன நிலையிலேயே நாம் பலமாக இருக்கின்றோம் என்றால் இப்போது ஓரிருவர் எம்மை விட்டுப் போனதால் நாம் பலவீனமடையமாட்டோம். அரசுக்கு எதிரான எமது மக்கள் சக்தி பலவீனமடையவில்லை. நான்கூட அரசுடன் இணைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. நீண்ட பட்டியலையே தர முடியும். ஆனால், கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டால் அரசுடன் போய் இணைவதல்ல. அதற்கான தீர்வு .கட்சிக்குள்ளேயே அதைப் பேசித் தீர்க்க வேண்டும். அரசியல் தளம் என்பது நாம் விரும்புவதுபோல் இருக்காது. கஷ்டமும் வரும் சந்தோஷமும் வரும். திருப்தியாகவும் இருக்கும் அதிருப்தியாகவும் இருக்கும். இவை எல்லாவற்றையும் சாதகமாக மாற்றுவதற்கு எமது அரசியல் யுக்தியின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

*கே : உண்மையில்,பசில் ராஜபக்சவுடன் இணைந்து அரசியல் செய்வது கஷ்டமா?*

ப: அவ்வாறு கஷ்டத்தை உணருகிறவர்களும் உள்ளனர். பசில் வேலை செய்யும் முறை ஒன்று இருக்கின்றது. அந்தமுறைமைக்கு உடன்படுகின்றவர்களும் உள்ளார்கள் அதை எதிர்க்கின்றவர்களும் உள்ளார்கள். நானும் அப்படியே. சில விடயங்களில் அவருடன் உடன்படுகிறேன். சில விடயங்களில் முரண்படுகிறேன் விமர்சிக்கின்றேன். இந்த அரசை விட பசில் எவ்வளவோ மேல். பசிலுடன் பிரச்சினை என்றால் அரசுடன் போய் இணைவது தீர்வு அல்ல. இருக்கின்ற இடத்தில் பிரச்சினை வருகின்றது என்றால் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும். பின்வாங்கக்கூடாது. வேறு தளத்தைத் தேடி ஓடக்கூடாது. பிரச்சினையைத் தீர்க்கும் திட்டம் ஒன்று கையில் இருக்க வேண்டும்.

*கே: உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நாட்டின் தலையெழுத்தை மாற்றக்கூடியது என நினைக்கிறீர்களா?*

ப: அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்றதை நாம் ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்று கூறும் தேர்தல் இது. இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு அரசு எதிர்பார்த்திருக்கின்றது. இந்தத் தேர்தலின் ஊடாக அந்த ஒப்பந்தத்தைச் செய்வதற்கு நாம் இடங்கொடுக்கலாமா?.

சமஷ்டியுடன் கூடிய சுயாட்சி புதிய அரசமைப்பின் ஊடாக தமக்குக் கிடைக்கும் என்று சுமந்திரன் கூறியுள்ளார். அப்படியான அரசமைப்பை தோற்கடிக்க வேண்டுமென்றால் இந்தத் தேர்தலில் அரசுக்கு எதிராக நாம் வாக்களிக்க வேண்டுமல்லவா. இவ்வாறான பல காரணங்களுக்காக நாம் இந்த அரசை தோற்கடிக்க வேண்டியுள்ளது. எமது கட்சியில் அனுமதி கிடைக்காமல் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டவர்கள் நாட்டின் நன்மை கருதி மொட்டுச் சின்னத்துக்கே வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர்கள் என்பதற்காகவும் உறவினர்கள் என்பதற்காகவும் பாடசாலை தோழர்கள் என்பதற்காகவும் தெரிந்தவர்கள் என்பதற்காகவும் வேறு கட்சிகளுக்கு வாக்களித்து அதன்மூல இந்த அரசு வெற்றிபெறுமாக இருந்தால் அதன் பின் ஏற்படப் போகும் விளைவுகளை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும்.

இதன் பின் படையினருக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். வடக்கு–கிழக்கிற்கு சமஸ்டி தீர்வைக் கொடுக்கும் புதிய அரசியலமைப்பு உருவாகும். அதன் ஊடாக நாட்டில் இருந்து வடக்கு–கிழக்கு பிரிக்கப்பட்டு தமிழீழம் உருவாக்கப்படும். பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும்.

50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் மொட்டுச் சின்னத்துக்கு அளிக்கப்பட்டால் அரசு மக்கள் ஆணையை இழக்கும். அரசின் வீழ்ச்சிக்கு அடித்தளமாக அமையும். ஒற்றை ஆட்சியைப் பாதுகாக்க முடியும். பெப்ரவரி 10 ஆம் திகதி நாம் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் எமது எதிர்கால சந்ததியினருக்கு இந்த நாடு மிஞ்சாது.

ஜனவரி 8 இற்கு முன் நாம் கூறியதை கேட்காததால்தான் இந்த நாடு இப்போது துன்பத்தை அனுபவிக்கின்றது. இனியும் அந்தத் பிழையைக் செய்ய வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். பெப்ரவரி 10 ஆம் திகதி இடம்பெறப் போவது சிறிய தேர்தல் அல்ல நாட்டின் தலையெழுத்தையே மாற்றப் போகும் தேர்தலாகும்.

*கே: இந்தத் தேர்தலின் பின் மகிந்த தரப்பும்மைத்திரி தரப்பும்இணைந்து நாடாளுமன்றில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் உண்டா?*

ப: இந்தத் தேர்தலில் அதிகமான வாக்குகள் எங்கள் கட்சிக்கு வீழ்ந்தால் சுதந்திரக் கட்சியின் அதிகமானவர்கள் மகிந்த பக்கம் திரும்புவர். ஐக்கிய தேசியக் கட்சிகாரர்களும் அந்த முடிவுக்கு வருவர். ஜனாதிபதியும் பிரதமரும் சிக்கலை எதிர்கொள்வர். நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரி மக்கள் எழுச்சி கொள்வர்.

மக்கள் எமக்கு 51 வீத வாக்குகளைத் தந்தால் மீதியை நாம் பாத்துக்கொள்வோம். அதன் பிறகு இந்த அரசால் இயங்க முடியாது. அரசு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நிலைக்கு நாம் கொண்டு வருவோம். எமக்குத் தேவையாக இருப்பது நாடாளுமன்றத்தைக் கலைப்பது தான். அதற்காக எம்.பி.க்கள் பலரை வளைத்துப் போடுவோம்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குத் தேவையான தகுதியானவர்களை மாத்திரமே நாம் இணைத்துக்கொள்வோம். தகுதியற்றவர்களை இணைக்கமாட்டோம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும்.

எதிர்வரும் தேர்தல் முடிவின் ஊடாக மக்கள் இந்த வேண்டுகோளை விடுத்தால் அரசு அதை நிறைவேற்றியே ஆகவேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றைக்கோரும் வாய்ப்பு ஒன்றை உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக நாம் மக்களுக்கு வழங்கியுள்ளோம். மக்கள் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

*கே: ஒன்றிணைந்த எதிர்கட்சிமீது உங்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி காரணாமாக நீங்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகப்போகிறீர்கள் என்று செய்திகள் வெளியாகியமை பற்றி..?*

ப: இது எனது அரசியல் எதிரிகளின் வேலை. அவர்கள் இவ்வாறு பொய் பரப்புவதன்மூலம் மகிழ்ச்சியடைகின்றனர். பரவாயில்லை. மகிழ்ச்சியடையட்டும். எங்களுக்குத் தெரியும் நாங்கள் யாரென்று. அதனால் இந்தச் செய்திகளால் நாங்கள் குழப்பமடையமாட்டோம்.

*கே: சுதந்திரக் கட்சி உங்கள் கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதற்கான ஒரு சமிக்ஞையை காட்டுகிறதே?*

ப: இது அவர்களின் தந்திரோபாய நகர்வாகும். சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள்தான் மொட்டுச் சின்னத்ததுக்கு வாக்களிக்கப் போகின்றனர் என்று அவர்களுக்குத் தெரியும். தேர்தலின் பின் இணைந்தே ஆட்சி அமைக்கப் போகின்றோம் என்று கூறி விட்டால் இணையத்தானே போகிறார்கள். சுதந்திரக் கட்சிக்குப் போட்டாலும் பரவாயில்லைதானே என்று மக்கள் சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பர். இப்படிச் செய்ய வைப்பதற்கான தந்திரோபாய நகர்வுதான் இது.

உண்மையில் சுதந்திரக் கட்சி இணைவதாக இருந்தால் அது ஐக்கிய தேசிய கட்சியுடன்தான் இணையுமே தவிர எம்முடன் அல்ல. இவர்கள் எமது வெற்றியைத் தடுப்பதற்கே சதி செய்கின்றனர். நாடாளுமன்றத் தேர்தலின்போது மகிந்தவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அறிவித்ததுபோல்தான் இதுவும்.

அதுமட்டுமா? சுசில் பிரேமஜயந்தவையும் அனுரபிரியதர்சன யாப்பாவையும் முறையே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் பதவியில் இருந்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயலாளர் பதவியில் இருந்தும் ஜனாதிபதி நீக்கினார். தேர்தல் முடிந்து எதிர்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தனுக்கு வழங்கினார். இந்தத் தேர்தல் முடிவிலும் இவ்வாறான நரித்தனமான வேலையைத்தான் செய்வார்.

ஏதேதோவெல்லாம் செய்து வாக்காளர்களை குழப்புவதற்கு சுதந்திரக் கட்சி முயற்சிகளை மேற்கொள்ளும் என்பது நிச்சயம். ஆனால், மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். அவர்கள் எதைச் செய்தாலும் அது போலி நாடகம் என்பதையும் மக்களை ஏமாற்றும் செயல் என்பதையும் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**நேர்காணல் : எம்.ஐ. முபாரக்**

# கழிவுநீர் வாய்க்காலால் மூக்கைப் பிடிக்கும் மக்கள்

வடமராட்சி,ஜன.17

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்கு முன்பாக திறந்த நிலையில் இருக்கும் கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்காலில் இருந்து துர்நாற்றம் வீசுவதால், கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வாய்க்கால் திருத்த வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் திறந்து விடப்பட்ட நிலையில் உள்ளது. இவ்வாறு திறந்து விடப்பட்டு நீண்ட காலமாகியும் அது மூடப்படமால் காணப்படுகின்றது. கழிவுகள் நிறைந்துள்ள அந்த வாய்க்காலில் இருந்து துர்நாற்றம் வீசுவதால், சிற்றுண்டிச்சாலைக்கு வரும் வாடிக்கையாளர்கள் மூக்கைப் பிடித்தபடியே சிற்றுண்டிகளை உண்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக குறித்த, சிற்றுண்டிசாலை உரிமையாளர் பிரதேச சபைக்கு அறிவித்த போதும், இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-66)








# மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க முடியும்

கொழும்பு, ஜன.17

உள்ளூராட்சித் தேர்தலில் பார்வையை இழந்தவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வாக்களிப்பதற்காக வேறு ஒருவரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான உதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்தவராக இருப்பதுடன் அவர் வேட்பாளராக இருக்கக் கூடாது என்றும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் கட்சியின் அங்கீகாரம் பெற்ற முகவராகவோ, வாக்குச் சாவடிக்கான பிரதிநிதியாகவோ அவர் இருக்கவும் கூடாது. உதவியாளரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு உரிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படுவது அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தயா மாஸ்டரைத் தாக்கிய முதியவர் தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம்,ஜன.17

தொலைக்காட்சி நிலையமொன்றுக்குள் கத்தி, பொல்லுடன் அத்துமீறி நுழைந்து அந்த நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டரைத் தாக்கிய வயோதிபர் தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.


அதனால் வயோதிபரின் விளக்கமறியலை வரும் ஜனவரி 30ஆம் திகதி வரை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையமொன்றுக்குள் கடந்த 9ஆம் திகதி மாலை வயோதிபர் ஒருவர் அத்துமீறி நுழைந்து, அவர் அங்கு பணியிலிருந்த செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வே.தயாநிதியைத் தாக்கினார். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட முதியவர் பிடிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் நேற்று செவ்வாய்க்கிழமைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

முதியவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்ததையடுத்த சிறைச்சாலை அத்தியட்சகரின் பணிப்பில் அவர் தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் கடந்த 10ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. முதியவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் அவரை மன்றில் முற்படுத்த முடியவில்லை என யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் மன்றுக்கு அறிக்கை முன்வைத்தார்.

இதனையடுத்து சந்தேகநபரின் விளக்கமறியலை வரும் 30ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்று உத்தரவிட்டது. (அ)





# தமிழ் மக்கள் பேரவையின் கலந்துரையாடல் நேற்று

யாழ்ப்பாணம், ஜன.16

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான "இடைக்கால அறிக்கையின் மாயையைக் கட்டுடைத்தல்" என்ற செயலமர்வு தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இந்து, கிறிஸ்தவ மத குருமார்கள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். (அ)

# பனை முறி...! பிணை முறி..! உங்களைச் சொல்லிக் குற்றமில்லை?

பொங்கலண்டு நடந்த ஒரு விசியம். பொங்கலைச் சாப்பிட்டுவிட்டு ஒரு கண் நித்திரை கொள்ளலாமெண்டால் சொந்தக்காரார் விடேல்லை. மாறி மாறி வந்தபடி. அதிலை என்ரை மருமேனோடை அவன்ரை ஒரு சினேகிதனும் வந்தவர். அவர் பாங்கிலைதான் வேலை. லீவிலை வந்திருந்தவர். அவரை முதலிக்கு அறிமுகப்படுத்தினதுதான் தாமதம், உடனை சட்டெண்டு "அண்ணை பிணை முறி" எண்டு பெருசாக்கத்தினமெல்லே? உண்மையா அது என்ன? எங்களுக்குச் சரியா விளக்கமில்லாமல் கிடக்கு" எண்டு கேட்டான்.

அது அண்ணை உவை கத்திறமாதிரி ஒரு பெரிய கிறிமினல் காரியம் இல்லை. அரசாங்கத்திக்கு வாற லாபத்திலை ஒரு பகுதி குறைஞ்சு போச்சு. அரசாங்கத்துக்கு வாற லாபத்தை ஒரு தனியார் கொத்திப் போட்டார். எல்லாக் குடுக்கல் வாங்கலும் சட்ட ரீதியா நடந்திருக்கு. சிலதைக் கண்டும் காணாமலும் விட்டிட்டினம். அவ்வளவுதான்.

சும்மா ஒரு உதாரணத்துக்குக் கதைப்பமன். ஓராள் மத்திய வங்கிக்குத் தன்ரை காசைக் குடுத்திட்டு 15 சதவீதம் வட்டியை வாங்கிறார் எண்டு. பிறகு அவர் அதிலை அரைவாசிக் காசைச் சனத்திட்டை வாங்கிக் கொண்டு சனத்துக்கு 9 சதவீத வட்டியைத் தான் குடுத்திருக்கிறார். அப்ப தன்ரை காசுக்கு மத்திய வங்கியிட்டை இருந்து 06 சத வீத வட்டியை கூட வாங்கி மத்திய வங்கியை நட்டப் படுத்திப் போட்டார். அவர் அந்த லாபத்தைத் தான் எடுத்துப் போட்டார். அதுகும் ஓராள் தனக்கு எடுக்கேல்லையாம். பச்சைக் கட்சிக்கு நிதி சேற்கிறதுக்காகத்தான் உந்த நாடகம் எண்டும் சனம் கதைக்கிது. எல்லாரும் ஒருமிச்சுத்தான் செய்தவை எண்டும் இப்ப எனக்குத் தெரியாது, உனக்குத் தெரியாது எண்டு ஆளை ஆள் சாட்டினம் போலை கிடக்கு. எண்டு விளக்கமாச் சொன்னார். உதைப் பாக்கேக்கை கடைசியா "ஒரு தமிழன்தான் பலியாடாப் போனான்" எண்டதுதான் என்ரை விளக்கம்.

எனக்கு விளங்கேல்லை என்னெண்டால், கோல்பேஸ் ஆமிக்காம்ப் இருந்த இடத்தைச் சைனா ஹோட்டலுக்கும், இந்தியா ஹோட்டல் ஒண்டுக்கும் வித்தினம். அதிலை பல லட்சம் ஊழல் நடந்ததெண்டு கதைக்கினம். அதைப் பற்றி இண்டைவரை ஒரு கதை இல்லை. கோல்பேஸ் கடலுக்கை துறைமுக நகரம் எண்டு ஒண்டைக் கட்டச் சைனாவுக்கு ஒரு சரியான எக்கிறிமெண்டும் இல்லாமல் இடத்தைக் குடுத்தினம். மாத்தளன் ஏயார்போட்டைக் கட்டிச்சினம். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டிச்சினம். சனசந்தடி இல்லாத இடத்துக்கு எல்லாம் றோட்டைப் போட்டினம். அதிவேக நெடுஞ்சாலை எண்டு கனக்கக் கட்டிச்சினம். அதை விடச் சண்டைக் கெண்டு வாங்கின எல்லாச் சாமான்களிலையும் அடியோ... அடி எண்டு கண்டு பிடிச்சாப் பிறகும், மைத்திரியாலை ஒண்டும் செய்யேலாமைக் கிடக்காம். உந்த மகிந்தா செய்த பகல் கொள்ளையளை எல்லாம் பிடிக்கத் திராணியில்லாத மைத்திரி-- தேத்தண்ணி குடிக்கச் சீனி களவு எடுத்தவனைப் பிடிச்சு செம்புள்ளி, கரும்புள்ளி வைச்சு ஊதிப் பெருப்பிச்சுக் கள்ளன் எண்டு காட்டிறதைப் போலை-- ஒண்டை பிடிச்சு வைச்சுக் கொண்டு, இப்ப எத்தினை நாளாப் பனை முறி, பிணை முறி எண்டு பேப்பருகளுக்கும் தீனி போட்டு, ரவியையும் கலைச்சு, ரணிலையும் நாட்டியம் ஆடப்பண்ணி அவரை ஒரு வெருளியாக்கி, எத்தினையைச் செய்து போட்டுருக்கிறார்.

உது ஆராலை வந்ததெண்டு நினைக்கிறியள். தன்ரை இனத்தைத் தானே காட்டிக் குடுத்து வயிறு வளத்து, தன்ரை வம்சத்தையும் வளக்கிற நாதாரியளாலைதானே வந்தது. எல்லாத்துக்கும் முண்டு குடுத்து நிமித்தப் போன எங்கடை நாயளையும் அடிச்சுச் சாக்காட்ட வேணுமேயொழிய அவங்களைக் குற்றஞ் சொல்லேலாது. ஒரு கேடுகெட்ட வம்சமாப் போனம் நாங்கள். இது ஒருத்தரிலையும் பிழை இல்லை. எங்கடை தலைவிதிதான் போட்டு ஆட்டுது எண்டு நினைக்கிறன்? அப்பிடி எங்களைப் போட்டுச் சிப்பிலி ஆட்டிற ஜனாதிபதி மைத்திரியும் வாழ்க, பிரதமர் ரணிலும் வாழ்க. அதோடை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் வாழ்க.

- வில்லங்கம் விநாசி

# நிதியமைச்சின் உத்தரவை நீக்க அமைச்சரவை முடிவு

கொழும்பு,ஜன.17

மதுபானசாலைகளின் நடைமுறைகள் தொடர்பில் நிதியமைச்சால் கடந்த வாரம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல்களை மீளப்பெற அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

மதுபானசாலை இயங்கும் நேரத்தை அதிகரிப்பது மற்றும் மதுபானசாலையில் பெண்கள் பணிபுரியும் வாய்ப்பை வழங்கல், பெண்கள் மதுபானம் வாங்க அனுமதியளித்தல் என்பன தொடர்பில் நிதியமைச்சு கடந்த வாரம் வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிட்டிருந்தது.

38 வருடங்களாக இலங்கையில் இருந்த சட்டத்தை மாற்றியே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அகலவத்தையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி, மேற்படி அறிவித்தல்களை மீளப் பெறுவதாக அறிவித்தார். கலாசாரம் மிகுந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் இது மிக முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்தே மேற்படி அறிவித்தல்களை மீளப் பெற அமைச்சரவை முடிவுசெய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில், மதுபானசாலை மற்றும் உற்பத்திச் சாலைகளில் பெண்களைப் பணியில் அமர்த்துவதற்கும் பெண்களுக்கு மது விற்பனை செய்யப்படுவதற்கும் 1979ஆம் ஆண்டு தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாடாளுமன்றுக்கு பிணைமுறி அறிக்கை

கொழும்பு, ஜன. 17

பிணைமுறி அறிக்கை நாடாளுமன்றத்துக்கு இன்று அனுப்பிவைக்கப்பட உள்ளது. கூடவே பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பான அறிக்கையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகத் தகவல்கள் ஊடாக அறியமுடிகின்றது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 23ஆம் திகதி கூடவுள்ளது. கடந்த 10ஆம் திகதி பிணை முறி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட அமர்வு இடம்பெற்றபோது குழப்பம் ஏற்பட்டதையடுத்து, சபாநாயகரால் சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அந்தநாள் ஞாபகம்



## 17.01.1917

தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னனும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான 'மக்கள் திலகம்' எம்.ஜி.இராமச்சந்திரன்(எம்.ஜி.ஆர்) பிறந்தார்.

# ஆயுதம் வைத்திருந்தவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.17

ஆபத்தை விளைவிக்கும் ஆயுதங்களைச் சட்டவிரோதமாகப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான மானிப்பாயைச் சேர்ந்த.சிவகுமார் (வயது 55) என்பவரின் விளக்கமறியல் எதிர்வரும் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள வீடொன்றில் முன்னர் புளொட் அலுவலகம் இருந்தது.

அந்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் இருந்த காரணத்தினால், அந்த வீட்டில் இருந்த குறித்த புளொட் உறுப்பினர் அங்கிருந்து வெளியேற மறுப்புத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், வீட்டு உரிமையாளர் தனது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்றின் கட்டளையின் பிரகாரம் கடந்த டிசெம்பர் 19 ஆம் திகதி அந்த வீட்டிலிருந்த புளொட்டின் முன்னாள் உறுப்பினரை வெளியேற்ற யாழ். மாவட்ட நீதிமன்றப் பதிவாளருடன் யாழ்ப்பாணம் பொலிஸார் சென்று வீட்டில் இருந்த பொருள்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர்.

அதன்போது அலுமாரி ஒன்றுக்குள் துப்பாக்கி, வெடிகுண்டுகள், வாள்கள் என்பன மீட்கப்பட்டன.

அதனையடுத்து புளொட்டின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். மேற்படி வழக்கு விசாரணை நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர் சார்பில் கடந்த தவணையின் போது மன்றில் முன்னிலையான பெரும்பான்மையின சட்டத்தரணி மன்றில் ஆஜராகவில்லை. அதனால், சந்தேகநபரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# எல்லை நிர்ணய அறிக்கை பெப்.4 இல் கையளிப்பு

கொழும்பு, ஜன. 17

மாகாண சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அடுத்த மாதம் 4ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என்று அந்தக் குழுவின் தலைவர் கே.தவலிங்கம் தெரிவித்துள்ளார்.

"பெரும்பாலான எல்லை நிர்ணய பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. மூன்று மொழிகளிலும் அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கை தற்சமயம் இடம்பெறுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி மாகாணசபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பாக ஐவர் அடங்கிய குழுவை நியமித்திருந்தார்.

எமது குழுவுக்கு நான்கு மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்தக் குறுகிய காலப்பகுதியில் 25 மாவட்டங்களிலிருந்தும் பொதுமக்களிடமிருந்து, வாய்மொழி மூலமும், எழுத்து மூலமும் கருத்துக்களும், யோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. குழுவின் அறிக்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஃபைசர் முஸ்தபாவிடம் கையளிக்கப்படவுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தொடர்ச்சிகள்

### பன்னங்கண்டி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் வட்டக்கச்சி மாயவனூரை சேர்ந்த 22 வயதான இராசேந்திரம் சர்வானந்தம் எனப் பொலிஸார் இனங்கண்டுள்ளனர்.

அதி வேகத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த இளைஞர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலத்துக்குள் விழுந்து இறந்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள இடம்பெற்று வருகின்றன. (அ)

### தீர்வைத் திணித்தால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை நடைபெற்றது. இதன் போது மக்கள் தரப்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமது செயற்பாட்டை கிராம மட்டங்களிலும் மாவட்ட ரீதியாகவும் தொடர்ச்சியான முன்னெடுக்க இருக்கின்றோம். அதே போன்று கிழக்கு மாகாணத்துக்கும் பேரவையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவுள்ளோம். மக்கள் இயக்கமாகிய எங்கள் அமைப்பு மக்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம் .

இடைக்கால அறிக்கையில் பயனில்லை என்பதால் அது பற்றி மக்களிடம் விழிப்பை ஏற்படுத்த முயன்று வருகின்றோம். அந்த அறிக்கை எப்படியானது என்றோ அல்லது அதனை ஏற்க வேண்டுமென்றோ கொழும்பில் இருந்து கொண்டு ஒருவர் தீர்மானிக்கமுடியாது. இங்குள்ள மக்களுக்கு என்ன தேவை? மக்களின் மனோ நிலை எப்படியானதாக இருக்கின்றது என்பதைப் பார்த்தே அதற்கேற்ற வகையில் தீர்வைத் தர முயலவேண்டும்.

ஆனால் அந்த அறிக்கையில் ஏதுமே இல்லை அது பயனற்றது என்று நாம் கூறினால் அதற்கு, அரசாங்கம் தருவதையும் நாம் தடுப்பதாக ஒரு விமர்சனமும் முன்வைக்கப்படுகிறது. ஆனால் நாம் கோரியதைத் தந்தால் தானே நன்மை. மாறாக அரசாங்கம் தருவதைப் பெற்றுக் கொள்வதால் எந்த நன்மையும் கிடையாது. அவ்வாறு அரசு தருவதைப் பெற்றுக் கொண்டால், வடக்கு கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதித்துவமும் குறைந்து ஏனையவர்களது பிரதிநிதித்துவமே அதிகரிக்கும்.

ஆகவே அரசு தருவதை எடுக்காது எமக்கு என்ன தேவையோ அதனைக் கோரிப் பெற வேண்டும். ஆனால் அரசு தருவதை எடுத்தால் அது எமக்கு பின்னடைவையே ஏற்படுத்தும். அது பின்னாளில் எமக்கு பெரும் பின்னடைவுகளையே ஏற்படுத்தும். எங்கள் மக்கள் விரும்பாத் தீர்வை அரசு திணிக்க முற்பட்டால் அதனை எதிர்ப்போம்.

இவ்வாறு நாங்கள் அதனை எதிர்க்கின்ற போது எங்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது. அது என்னவெனில் எங்களுக்கு எதிரானவர்களை எதிர்ப்பது சுலபம். ஆனால் எங்களோடு இருப்பவர்களை தடுப்பது கஷ்டம் . ஜெனிவா அமர்வுகளில், எங்களது அமைச்சர் ஒருவர் ஒவ்வொரு வருடமும் சென்று கலந்து கொள்ளும் நிலையில் நானும் செல்ல வேண்டிய தேவை என்றால் அதனை அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம் " என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

### புதிய கூட்டணி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்துள்ளார் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு யாழ். வை.எம்.சி மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டு, வடக்கு முதலமைச்சர் தலைமையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து மாற்று அணியொன்றை உருவாக்கும் நிலை ஏற்பட்டது.

இவ்வாறு மாற்று அணியொன்று தமக்கு எதிராக வந்துவிடுமோ என்ற அச்சத்தில் ஆடிப் போயிருந்த கூட்டமைப்பினர் அந்த நடுக்கத்தைச் சமாளிப்பதற்காக தாமாகவே எம்மிடம் வந்து பேசியிருந்தனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், மாவை சேனாதிராசா மற்றும் சிறிகாந்தா ஆகியோரே, எம்முடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்து எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தினர்,

அவ்வாறு அவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட விரும்பிய போது ஒற்றுமையே பிரதானம் என்ற அடிப்படையில் நாமும் அதனை மறுதலிக்கவில்லை. ஆனால் அந்த ஒற்றுமையானது கௌரவமானதாகவும் சமத்துவமானதாகவும் இருக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தியிருந்தோம்.

ஆயினும் பின்னர்அந்தக் கூட்டு உடைந்து சுரேஸும், கஜேந்திரகுமாரும் தனித் தனியாகப் பிரிந்து சென்ற நிலையில் முதலமைச்சரும் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இதனால் அதற்கு பின்னர் எம்முடன் எந்தவித தொடர்பையும் கூட்டமைப்பினர் ஏற்படுத்தவில்லை. ஆகையினால் தான் அவர்கள் தமது நடுக்கத்தைக் குறைக்க தமக்காகவே எம்மிடம் வந்ததை நாம் உணர்ந்தோம். அதன் பின்னர் அவர்களோடு சேர நாம் முயலவில்லை" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

### கிளிநொச்சியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்கு முன்னர் பல கிராமங்களில் மஞ்சுவிரட்டு விளையாட்டு இடம்பெற்று வந்தது.

பல வருடங்களாகக் கைவிடப்பட்டிருந்த மஞ்சுவிரட்டு நிகழ்வு கிளிநொச்சி பெரியபரந்தன் பிரதேச இளைஞர்களால் நேற்று சிறப்பாக விளையாடப்பட்டது.

தாங்கள் வளர்க்கும் மாடுகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கழுத்தில் துணி ஒன்றில் பணம் அல்லது பிடிக்கப்படும் மாட்டின் உரிமையாளரால் தனது மாட்டை பிடித்து கழுத்தில் கட்டப்பட்ட துணியை கழற்றினால் இவ்வளவு தொகை பரிசு என அறிவிக்கப்பட்டு மாடுகள் வெடிகொளுத்தி அவை விரட்டப்படும். அவ்வாறு விரட்டப்படும் மாடுகளை இளைஞர்கள் மடக்கி பிடிக்க வேண்டும். இதுவே மஞ்சுவிரட்டு விளையாட்டாக இருந்து வருகிறது.

நேற்றுக் கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்த விளையாட்டில் பல இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தனர். (அ)

### தற்கொலையாளிக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை படுகொலை செய்ய முயற்சித்த தற்கொலைதாரி ஒருவருக்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டிலேயே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயொருவருக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேநபர் சிறையில் இருக்க வேண்டிய காலத்துக்கும் அதிகமாகவே சிறைத்தண்டனை அனுபவித்துள்ளதாகவும், எனவே அவருக்கு 15 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 24 மாதகால சிறைத்தண்டனையும், 25,000 ரூபா அபராதத் தொகையையும் விதித்து மேல்நீதிமன்ற நீதிபதி விக்ரம களுஆராய்ச்சி தீர்ப்பளித்தார். (அ)

### கிட்டுவுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பு கைவேலிப்பகுதியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது

நிகழ்வில் கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கும் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் நினைவுரைகளும் நிகழ்ந்தன. இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)



# கட்டடம் இடிந்ததில் 75 பேருக்கு காயம்

ஜகார்த்தா, ஜன.17

இந்தோனேசியாவில் கட்டடம் ஒன்று சரிந்து விழுந்ததில் 75 பேர் காயமடைந்தனர்.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் கட்டுமானப் பணியில் இருந்த கட்டடம் ஒன்றே நேற்றுத் திடீரெனச் சரிந்து விழுந்தது. இதில் அந்த கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் 75 பேர் காயமடைந்தனர்,

இந்த விபத்தில் எந்தவித உயிரிழப்பும் ஏற்படவில்லை. பெரும்பாலானவர்களுக்கு கை, கால்களில் காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் கட்டடம் இடிந்து விழுந்த பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸர்ர் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# குரைக்கிறார் ட்ரம்ப்

## வடகொரியா கிண்டல்



வடகொரியா,ஜன.17

“அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அணுஆயுதப் பொத்தான் மிரட்டல், நோய் பிடித்த நாயின் குரைச்சல்” என்று வடகொரியா மீண்டும் கடுமையாக விமர்சித்துள்ளது.

வடகொரொயாவில் நடைபெற்ற புத்தாண்டு தின கொண்டாட்டத்தின் போது உரையாற்றிய வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், “வடகொரியா அணு ஆயுதச் சோதனைகளை முழுமையாக நடத்திவிட்டது. அமெரிக்காவின் எந்த இடத்திலும் தாக்குதல் நடத்தும் அணு ஆயுத பொத்தான் என் மேசை மீது எப்போதும் இருக்கிறது” என்று தெரிவித்தார்.

இதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில், “என்னிடமும் அணுஆயுத பொத்தான் இருக்கிறது. ஆனால், கிம்மிடம் இருப்பதை விட, என்னிடம் இருப்பது மிகப் பெரியது, சக்தி வாய்ந்தது. அந்தப் பொத்தான் நன்றாக வேலையும் செய்கிறது. இதை கிம்முக்கு சொல்லுங்கள்” என்று பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில் ட்ரம்புக்கு வடகொரியா பதிலளித்துள்ளது. வடகொரிய அரசால் வெளியிடப்படும் செய்தித்தாள் ஒன்றில், “ட்ரம்பின் பேச்சுகள் பைத்தியக்காரத்தனமானவை, அவை ஒரு நோய் பிடித்த நாயினது குரைச்சல்” என்று கூறியுள்ளது.

கடந்த சில மாதங்களாக ஜனாதிபதி ட்ரம்பும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்-னும் கடும் சொற்களால் பரஸ்பரம் விமர்சித்து வந்தனர். இதில் திடீர் திருப்பமாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், வடகொரியாவுடன் பேச்சு வார்த்தைக்குத் தயார் என்று அறிவித்தார். இந்த நிலையில் ட்ரம்பின் மீது இத்தகைய விமர்சனத்தை வடகொரியா முன்வைத்துள்ளது. (அ)

# விண்வெளிப் போர்க்களம்

## ரஷ்யா கடும் எதிர்ப்பு


மொஸ்கோ, ஜன. 17

அமெரிக்காவின் பாதுகாப்பை மேம்படுத்த விண்வெளியில் ஏவுகணைகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுதங்களை நிலை நிறுத்தும் திட்டத்துக்கு ரஷ்யா கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. ஆயினும் குறித்த திட்டம் தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனுக்கு அந்த நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்மூலம் எதிரி நாடுகள் அமெரிக்கா மீது ஏவுகணைகளை வீசினால் விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்ட ஏவுகணை மூலம் அதனை இடைமறித்து அழிக்க முடியும். மேலும் அதிநவீன ஆயுதங்களை விண்வெளியில் தயார் நிலையில் வைத்திருக்கவும் அமெரிக்க பாதுகாப்புத் துறை திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாரவ், மொஸ்கோவில் நேற்று நிருபர்களிடம் கூறியபோது, “விண்வெளியை இராணுவமயமாக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக சர்வதேசப் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்படும். அமெரிக்காவின் இந்த முயற்சியை ரஷ்யாவும், சீனாவும் கடுமையாக எதிர்க்கும்” என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 2007 இல் சீனாவின் செயற்கைக் கோள் ஒன்றை அமெரிக்க இராணுவம் தரையில் இருந்து ஏவுகணையை வீசி அழித்தது. இத்தகைய ஏவுகணைகளை சீனா அதிக அளவில் தயாரித்து வருவதாகக் கூறப்படுகிறது. வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தலும் அதிகரித்து வருகிறது. இத்தகைய சவால்களை எதிர்கொள்ளவே விண்வெளியில் ஆயுதங்களை நிலைநிறுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது . (அ)

# சங்கிலியால் பிள்ளைகளை அடைத்து வைத்த பெற்றோர்



கலிபோர்னியா, ஜன.17

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் தமது 13 பிள்ளைகளையும் அறையில் அடைத்துவைத்த பெற்றோரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கலிபோர்னியா மாகாணத்திலுள்ள பெர்ரிஸ் நகரத்தில்தான் இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் நடந்துள்ளது. இதுகுறித்து கலிபோர்னியா பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, “கலிபோர்னியவைச் சேர்ந்த டேவிட் ஆலன்-லூயிஸ் அன்னா தம்பதியரின் மகள் ஒருவர், அவரது இல்லத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பி வந்து, எங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அதில் அவரது பெற்றோர் தனது 12 சகோதரர்களையும் ஒரு அறையில் சங்கிலியால் கட்டி வைத்திருக்கும் அதிர்ச்சிகரமான தகவலைக் கூறினார். அவர் அங்கிருந்து தப்பி வந்ததாகவும், அவரது சகோதர, சகோதிரிகளைக் காப்பாற்றும்படியும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட வீட்டுக்குச் சென்று துர்நாற்றம் நிறைந்த அறையில் கட்டி வைக்கப்பட்டிருந்த 13 குழந்தைகளை மீட்டோம்” என்றார்.

டேவிட் ஆலன் - லூயிஸ் அன்னா இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இருவருக்கும் மனநோய் ஏற்பட்டதாலேயே தமது பிள்ளைகளை இப்படிச் சங்கிலியால் கட்டி வைத்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. (அ)

# தினகரன் தனிக்கட்சி



சென்னை,ஜன.17

தனிக் கட்சி தொடங்குவது தொடர்பாக எம்.ஜி.ஆர் பிறந்தநாளான இன்று முடிவு செய்யப்படும் என ஆர்.கே.நகர் எம்.எல்.ஏ டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

வானூர் அருகே குயிலாபாளையம் பண்ணை வீட்டில் தங்கி பொங்கல் விழாவை குடும்பத்துடன் கொண்டாடிய டிடிவி.தினகரன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை கோத்தகிரி செல்லும் வழியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.

“குருட்டு அதிர்ஷ்டத்தில் எடப்பாடி பழனிச்சாமி முதல்வரானதால் காவிரி நீரை தமிழகத்துக்கு பெற மத்திய அரசிடம் கோரிக்கைதான் வைக்க முடியும். வேறொன்றும் செய்ய அவர்களால் முடியாது.

7.5 கோடி தொண்டர்களின் எண்ணத்தை ஆர்.கே நகர் மக்கள் பிரதிபலித்துள்ளனர். வெற்றியை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் ஆர்.கே.நகர் மக்களிடம் பணம் கொடுத்து வெற்றிபெற்று விட்டதாக தாழ்த்தி பேசி வருகின்றனர்.

தனிக் கட்சி தொடங்குவதற்கு எப்படி செயல்பட வேண்டுமோ அப்படி செயல்படுவேன். தனிக் கட்சி தொடங்குவது தொடர்பாக எம்.ஜி.ஆர் பிறந்தநாளில் முடிவு செய்வோம். தமிழகம் முழுவதும் உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெறுவோம்” இவ்வாறு அவர் கூறினார். (அ)




# சிவா படத்தில் இசைப்புயல்


சென்னை, ஜன. 17

ரவிக்குமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள புதிய படத்தின் இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மான் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்.

‘வேலைக்காரன்’ படத்தைத் தொடர்ந்து பொன்.ராம் இயக்கத்தில் உருவாகி வரும் புதிய படத்தில் நடித்து வருகிறார் சிவகார்த்திகேயன். 24 ஏ.எம் நிறுவனம் தயாரித்து வரும் இந்தப் படத்தில் சமந்தா, சிம்ரன், நெப்போலியன், சூரி உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள்.

சிவகார்த்திகேயனின் பிறந்த நாளன்று பெர்ஸ்ட் லுக்குடன் படத்தின் பெயரையும் அறிவிக்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது.

பொன்.ராம் படத்தைத் தொடர்ந்து ‘இன்று நேற்று நாளை’ இயக்குநர் ரவிக்குமார் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் சிவகார்த்திகேயன். 24 ஏ.எம் நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படத்தின் இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மான் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப்பதாகப் படக்குழு அறிவித்திருக்கிறது. 2019ஆம் ஆண்டில் இந்தப் படம் வெளியாகும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். (அ)



# கிராண்ட் அதிரடி

கிராண்ட்ஹோம் அதிரடியால் பாகிஸ்தானுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டியிலும் நியூசிலாந்து வெற்றி பெற்று 4:0 என முன்னிலையில் உள்ளது.

நியூசிலாந்து - பாகிஸ்தான் இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே நடைபெற்று முடிந்த 3 போட்டிகளிலும் வெற்றி பெற்ற நியூசிலாந்து, தொடரைத் தன் வசப்படுத்தியிருந்த நிலையில், நேற்று 4ஆவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக பகர் சமான், பஹீம் அஷ்ரப் ஆகியோர் களமிறங்கினார்கள். ஓர் ஓட்டம் சேர்த்த நிலையில் பஹீம் அஷ்ரப் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பாபர் ஆசம் 3 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

3ஆவது விக்கெட்டுக்காக பகர் சமானுடன் ஹரிஸ் சொஹைல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பாகிஸ்தானைச் சரிவிலிருந்து மீட்டது. இருவரும் அரைச்சதம் அடித்தனர். பகர் சமான் 54 ஓட்டங்களிலும், ஹரிஸ் சொஹைல் 50 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர்.

அடுத்து வந்த மொகமது ஹபீஷ் 81 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் சர்பிராஸ் அஹமது 51 ஓட்டங்களும் சேர்க்க பாகிஸ்தான் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 262 ஓட்டங்கள் சேர்த்தது. நியூசிலாந்து அணி சார்பில் டிம் சவுத்தி 3 விக்கெட்டுகளையும், கேன் வில்லியம்சன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பின்னர் 262 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது. மார்ட்டின் கப்தில், கொலின் முன்றோ ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார்கள். மார்ட்டின் கப்தில் நிதானமாக விளையாட, கொலின் முன்றோ அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

முன்றோ 42 பந்துகளில் 56 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தர்ர். கப்தில் 31 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். 3ஆவது வீரராகக் களமிறங்கிய கேன் வில்லியம்சன் 32 ஓட்டங்களுடனும், அடுத்து வந்த ரோஸ் டெய்லர் ஓர் ஓட்டத்துடனும், டொம் லாதம் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 35 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

கடைசி 90 பந்துகளில் 109 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 6ஆவது விக்கெட்டுக்காக நிக்கோல்ஸ் உடன் கிராண்ட்ஹோம் ஜோடி சேர்ந்தார். கிராண்ட்ஹோம் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். அவர் 40 பந்துகளில் 7 பௌண்டரிகள், 5 சிக்சர்களுடன் 74 ஓட்டங்களைச் எடுக்க நியூசிலாந்து அணி 45.5 ஓவர்களிலேயே இலக்கை எட்டி ஐந்து விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.' நிக்கோல்ஸ் 70 பந்துகளில் 52 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிக்கு துணைபுரிந்தார்.

இந்த வெற்றியின் மூலம் 4:0 என தொடரில் நியூசிலாந்து முன்னிலையில் உள்ளது. 5ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறவுள்ளது. (ஐ)

# முன்னணிகள் முன்னேற்றம்



மெல்பேர்ண், ஜன. 17

அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் நட்சத்திர வீராங்கனைகளான முகுருசா, ஹாலே, ஷரபோவா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இதில், நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில், முதல் நிலை வீராங்கனையான சிமோனா ஹலேப், டெஸ்டானி அயவாவை எதிர்கொண்டார். இதில் ஹலேப் 7-6, 6-1 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

3ஆம் நிலை வீராங்கனையான முகுருசா, பொன்செட்டை எதிர்த்து விளையாடினார். இதில் முகுருசா 6:4, 6:3 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றார்.

பிளிஸ்கோவாவிற்கு எதிரான போட்டியில் ரட்வன்ஸ்கா 2:6, 6:3, 6:3 எனவும், மரியா ஷரபோவா 6:1, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் டி.மரியாவை வீழ்த்தினார். 21ஆம் நிலை வீராங்கனையான ஏஞ்சலிக் கெர்பர் 6:0, 6:4 என்ற புள்ளிக் கணக்கில் பிரைட்சமை வீழ்த்தினார். (ஐ)



# சனத்துக்கு சத்திரசிகிச்சை

மெல்பேர்ண், ஜன. 17

இலங்கைக் கிரகிகெட் அணியின் முன்னாள் தலைவரும், அதிரடித் துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூரியாவுக்கு அறுவைச் சிகிச்சை நடந்துள்ளது.

சமீபத்தில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த சனத் ஜெயசூரியாவின் புகைப்படங்கள் வைரலாகின.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ணில் உள்ள மருத்துவமனையில் முழங்கால் மாற்று அறுவைச் சிகிச்சை நடந்துள்ளது. இது குறித்த புகைப்படமும் தற்போது இணையத்தளங்களில் வைரலாகி வருகிறது. (ஐ)



# பாலியல் குற்றச்சாட்டு

சமீபத்தில் நடந்து முடிந்த கோல்டன் குளோப் விருதுகள் வழங்கும் விழாவில் நடிகைகள் பாலின ரீதியாக துன்புறுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கருப்பு நிறத்தில் உடை அணிந்து வந்தது உலகத்தின் மொத்தக் கவனத்தையும் ஈர்த்தது.

இந்நிலையில் 130க்கும் அதிகமான விளையாட்டு வீராங்கனைகள் அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர்களின் மருத்துவர் ஒருவர் மீது துன்புறுத்தல் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் நான்கு முறை ஒலிம்பிக் சம்பியனான சிமனெ பிளெஸ் முக்கியமானவர். (ஐ)



# மான்செஸ்டர் யுனைடெட் வெற்றி

பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில், ஸ்டோக் சிட்டியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது மான்செஸ்டர் யுனைடெட்.

இங்கிலீஷ் பிரிமீயர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற போட்டி ஒன்றில் மான்செஸ்டர் யுனைடெட் - ஸ்டோக் சிட்டி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் போல் போக்பா கொடுத்த பந்தை வாலன்சியா கோலாக மாற்றினார். 38ஆவது நிமிடத்தில் மீண்டும் போல் போக்பா கொடுத்த பந்தை கோலாக மாற்றினார் மார்சியல். இதனால் முதல் பாதி நேரத்தில் மான்செஸ்டர் யுனைடெட் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்திலும் மான்செஸ்டர் அணியின் கையே ஓங்கியது. ஆட்டத்தின் 72ஆவது நிமிடத்தில் மார்சியல் கொடுத்த பந்தை லூக்காகு கோலாக மாற்றினார். இதனால் மான்செஸ்டர் 3:0 என வெற்றி பெற்றது.

பிரிமீயர் லீக் புள்ளிகள் பட்டியலில் மான்செஸ்டர் சிட்டி 23 போட்டிகளில் முடிவில் 62 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. மான்செஸ்டர் யுனைடெட் 23 போட்டிகளில் விளையாடி 50 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. லிவர்பூல் 3ஆவது இடத்தில் உள்ளது. (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 17.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.